DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.2/2025 | Deposition of Witness for : PW2 |
| Name : மணிராஜ் | Father/Husband Name : |
| Age : 39 | Village : தேரியூர் |
| Taluk : திருச்செந்தூர் | Calling : Online Job |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10 February 2026. Accused A1, A2 absent. Petition U/s.355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது தேரியூரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா ஆவார். எதிரிகளை தெரியும், எனது அக்கா கணவரின் உறவினர்கள் ஆவார்கள்.

2. கடந்த 16.05.2024 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் என்னுடைய அக்கா அவரது தோட்டத்தில் இருந்தார். அப்போது அங்கு வந்த எதிரிகள் தேவடியா மகளே என்று எனது அக்காவை தோட்டத்து பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு ஆபாசமாக பேசிக்கொண்டிருந்தார்கள். எனது அக்காவை எதிரிகள் அடிக்க வந்தபோது நான் அவர்களை தடுத்தேன். உடனே எதிரிகள் உனது அக்காவிற்கு ஆதரவாக வந்தால் உன்னையும் அடித்து கொன்றுவிடுவோம் என்றும் நீ தனியாகத் தான் தோட்டத்திற்கு அடிக்கடி சென்று வருகிறாய் என்றும் 1 ஆவது எதிரி ஜெயக்குமார் என்னை மிரட்டினார்.

3. மேலும் எனது அக்காவின் இருசக்கர வாகனத்தின் சாவியை பிடுங்கிவிட்டார்கள். மேலும் உங்களை விடமாட்டோம் என்றும் நீங்கள் போலீசுக்கு போனாலும் எங்களை ஒன்றும் செய்யமுடியாது என்று கூறினார்கள். உடனே நான் எதிரிகளிடம் உங்கள் மீது குலசேகரப்பட்டினத்தில் வழக்கு பதிவாகியுள்ளது, மீண்டும் ஏன் இவ்வாறு தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு எதிரிகள் அங்கும் எங்களை ஒன்றும் செய்யமுடியவில்லை, இங்கும் உங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று கூறினார்கள். பின்பு எதிரிகள் அவர்கள் வந்த காரில் சென்றுவிட்டார்கள். இதுசம்பந்தமாக அ.சா.1 புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை

**மறுவிசாரணை** : இல்லை

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.02.10 16:18:22 +0530

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.02.10 16:18:27 +0530

Judicial Magistrate, Sathankulam.